FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348072

1. District : Krishnagiri மாவட்டம் PS: V S G AC காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 15/AC/2025 முத.அ. எண் Date: 15.10.2025 நாள்

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: by the PC Amendment Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை Before 13.00 hrs on 15.10.2025
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 15.10.2025 at 22.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Through Sources
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் RTO incoming check post Zuzuvadi, Hosur, Krishnagiri District. About 55 Kms west
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Ravi குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : S. Sathasivam தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 52/2025 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspector of police தொழில் (g) Address : o/o the Deputy Superintendent of Police Vigilance and Anti-corruption Krishnagiri முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. C.H. Prabakaran, Age 52, S/o Chandrasekaran, Motor Vehicle Inspector (CNT), Incoming check post, Zuzuvadi, Hosur, Krishnagiri.
2) Tr. G. Karthick, Age 41, S/o Gunasekaran, Assistant, RTO incoming check post, Zuzuvadi, Hosur, Krishnagiri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo-Moto

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15/10/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16.10.2025 at – 08.00 hrs

Name: பெயர் S. Ravi
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police
VAC, Krishnagiri

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 15/AC/2025 U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்-12 ன் தொடர்ச்சி.

S.ரவி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி ஆகிய நான் இன்று 15.10.2025 ஆம் தேதி மாலை 13.00 மணியளவில் நிலை அலுவலில் இருந்தபோது, எனக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வழி சோதனைச்சாவடியில் உள்ள அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளி மாநிலத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குள் நுழையும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அரசு சாட்சிகள் திரு.N.செந்தில், வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்), வட்டாட்சியர் அலுவலகம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.S.அருண்குமார், வருவாய் ஆய்வாளர், பாலேப்பள்ளி உள்வட்டம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் முன்னிலையில் 15.10.2025 ஆம் தேதி மாலை 17.00 மணி முதல் இரவு 20.00 மணி வரை அந்த உள்வழி சோதனை சாவடியில் என்னால் ஒரு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் சோதனையின் போது சோதனை சாவடியில் பணியில் இருந்த உதவியாளர் திரு.G.கார்த்திக் அவர்களிடம் ஒசூர் உள்வழி சோதனை சாவடியின் பொறுப்பு அலுவலரான மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) அவர்களை பற்றி கேட்க, அதற்கு அவர் ஒசூர் உள்வழி சோதனை சாவடியில் பிரபாகரன் என்பவர் பொறுப்பு வகித்து வருவதாகவும், அவர் உடல்நிலை சரியில்லை என்று மருத்துவமனை செல்வதாக கூறி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் அலுவலக பணியாளர்கள் நடமாட்டப் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டு சென்றுள்ளதாகவும் தெரிவித்து, அந்த பதிவேட்டினை எடுத்து காவல் ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். மேற்படி பதிவேட்டினை பார்வையிட்டதில் பக்கம் எண்கள் 10 மற்றும் 11-ல் 15.10.2025 ஆம் தேதி மாலை 03.50 மணிக்கு வெளி செல்வதற்கான பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது தெரியவருகிறது. அந்த திடீர் சோதனையின் போது உதவியாளர் திரு.G.கார்த்திக்

அவர்களால் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 15.10.2025 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் மாலை 04.30 மணி வரையில் அரசு கட்டணம் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.1,07,029/- என்று தெரிவித்தார். மேற்படி வசூல் செய்யப்பட்ட பணத்தை பற்றி கேட்க உதவியாளர் திரு.கார்த்திக் அவர்கள் தன்னுடைய இருக்கைக்கு இடது புறத்திலிருந்த பச்சைநிற பிளாஸ்டிக் கூடையில் இருந்த பணத்தை எடுத்து பணம் எண்ணும் இயந்திரம் மூலமாக கணக்கிட்டு சொன்னதில் மொத்தம் ரூ.1,07,029/- இருந்தது. அதனை பல்வேறு தலைப்புகளின் கீழ் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகையுடன் ஒப்பிட்டு பார்க்கையில் சரியாக இருந்தது. பிறகு அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.1,07,029/-ஐ உதவியாளர் திரு.G.கார்த்திக் அவர்களிடம் கொடுத்து, அந்த பணத்தை முறையாக அரசு கணக்கில் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. பிறகு உதவியாளர் திரு.G.கார்த்திக் அவர்களிடம் வேறு பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் ஆம் என்று சொல்லி அவருடைய பேண்டின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து ரூ.2,700/- ஐ எடுத்து ஆஜர் செய்து தான் அலுவலுக்கு வரும்போது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததாலும், அலுவலகத்தில் பராமரித்துவரும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் அதற்கான உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி சோதனையின்போது மாலை சுமார் 16.45 மணிக்கு மருந்தகம் சென்று திரும்பிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.H.பிரபாகரன் அவர்களை விசாரிக்க, அவர் தான் கடந்த 01.10.2025 ஆம் தேதி முதல் ஒகூர் உள்வழி சோதனை சாவடியில் மாற்று பணியாக பணிபுரிந்து வருவதாகவும், தான் இன்று 15.10.2025 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் மறுநாள் 16.10.2025 ஆம் தேதி காலை 08.00 மணி வரையில் பணி செய்து வந்ததாகவும், தனக்கு உடல்நிலை சரியில்லாததால் இன்று மாலை 03.50 மணிக்கு மருத்துவமனை செல்வதற்காக அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் அலுவலக பணியாளர்கள் நடமாட்டப் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டு சென்றுவிட்டு தற்போது அலுவலுக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்தார். அவரிடம் திடீர் சோதனைக்கு வந்த விவரம் தெரிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகரன் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் ஆம் என்று சொல்லி அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.3,200/-ஐ எடுத்து ஆஜர் செய்து தான் சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர்

சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததாலும், அலுவலகத்தில் பராமரித்துவரும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் அதற்கான உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகரன் அவர்களது இருக்கைக்கு முன் இருந்த டேபிளுக்கு அடுத்திருந்த மர மேசையின் மீதிருந்த ஒரு அட்டை பெட்டியினுள் பணத்தாள்கள் இருந்தன. அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க, அது வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் வாகன ஓட்டுனர்களால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட பணம் என்று தெரிவித்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 48 எண்ணிக்கையிலும், 200/- ரூபாய் தாள்கள் 9 எண்ணிக்கையிலும், 100/- ரூபாய் தாள்கள் 15 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் ரூ.27,300/- இருந்தது. அந்தப் பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.H.பிரபாகரன் மற்றும் உதவியாளர் திரு.கார்த்திக் ஆகியோருக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்பதால் அந்த பணம் ரூ.27,300/-ஐ அப்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. பிறகு சந்தேகத்தின் அடிப்படையில் அரசு சாட்சிகளின் முன்னிலையில் திரு.C.H.பிரபாகரன் அவர்களின் இருக்கைக்கு முன்பிருந்த மர மேசையினை அரசு சாட்சிகள் முன்னிலையில் காவலர்கள் உதவியுடன் சோதனை செய்தபோது மேற்படி மர மேசைக்கு மேலே 12 சிறு சிறு அறைகளாக தடுக்கப்பட்டிருந்தது. மேற்படி அறைகளை சோதனை செய்ததில், கிழக்கு புறமிருந்து இரண்டாவது அறையினை சோதனை செய்ததில், அதில் 4 காக்கி கவர்கள் இருந்தன. அதனை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது அதன் முதல் கவரில் 500/- ரூபாய் நோட்டுகள் கட்டாக இருந்தது. அந்த காக்கிநிற கவரில் உள்ள பணத்தை சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் இருந்த மூன்று காக்கி கவர்களில் ஒவ்வொன்றிலும் 500/- ரூபாய் தாள்கள் 50 எண்ணிக்கையில் ரூ.25,000/- என மொத்தம் ரூ.75,000/- இருந்தது. அதேபோல், நான்காவது காக்கிநிற கவரில் உள்ள பணத்தை சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 89 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.44,500/- இருந்தது. மேற்படி இரண்டாவது அறையில் இருந்த நான்கு கவர்களில் மொத்தம் ரூ.1,19,500/- இருந்தது. மேற்படி நான்கு காக்கிநிற கவர்களிலும் இருந்த மொத்த தொகை

ரூ.1,19,500/- குறித்து திரு.C.H.பிரபாகரன் அவர்களிடம் கேட்க, அதற்கு அவர் இன்றைய தினம் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் அவர்களால் தனக்கும், உதவியாளருக்கும் கொடுக்கப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். ஆகவே அந்தப் பணம் ரூ.1,19,500/- கையூட்டு பணம் என்பதால் அந்த பணத்தை அப்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. பிறகு மேற்படி சோதனைசாவடியின் அலுவலக அறை, மோட்டார் வாகன ஆய்வாளரின் ஓய்வு அறை மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களது அறைக்கு கிழக்கு புறத்தில், மேற்கு பார்த்தவாறு இருந்த பதிவேடுகள் அறையினை அரசு சாட்சிகள் முன்னிலையில் என்னால் சோதனை செய்யப்பட்டதில் கைப்பற்றக் கூடிய தடயங்கள் எதுவும் இல்லை. இது சம்மந்தமாக 15.10.2025 ஆம் தேதியன்று மாலை 17.00 மணி முதல் இரவு 20.00 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் நகல் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.H.பிரபாகரன் மற்றும் உதவியாளர் திரு.G.கார்த்திக் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ,1,46,800/- உடன் கிருஷ்ணகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து பொது ஊழியர்களான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.H.பிரபாகரன் மற்றும் உதவியாளர் திரு.G.கார்த்திக் ஆகியோர் வாகன ஓட்டுனர்களுக்கு தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்தமைக்காக அவர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்று, அதனை பிரித்துக்கொள்ளும் பொருட்டு செயல்பட்ட குற்றத்திற்காக இன்று 15.10.2025 ஆம் தேதி 22.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 15/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 -ன்படி குற்றவழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் மாவட்ட முதன்மை நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

15/10/2025

சார்பு ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி.